**இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1996 இன் 26 ஆம் இலக்க புத்த சிராவக பிக்கு பல்கலைக்கழக சட்டத்தின் 46 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள், இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்களை சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், பதிவசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பல்கலைக்கழகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடனான தொடர்புடைய இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடை முறையல்லாத சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 35,695,254 கிரயமான சொத்துக்கள் மேலும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டன. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நடை முறையல்லாத சொத்துக்களின் மீள் மதிப்பீட்டு செயற்பாடு 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக இருக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 23,110,000 ஆன மூலதன மானியம் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 இன் 117(ஈ) பந்தியின் பிரகாரம் கற்பனைச் சொத்துக்களை ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்காமல் நிதி நிலைமை கூற்றில் புறம்பான உருப்படி ஒன்றாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 495,140 கிரயமான கணனி மென்பொருட்களின் பெறுமதியை நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் இந்த உருப்படியை கற்பனைச் சொத்துக்களாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2012 இன் 15 ஆம் இலக்க புத்த சிராவக பிக்கு பல்கலைக்கழக (திருத்த) சட்டத்தின் 11 ஆம் பந்தி (ஆ) (XV) | குறித்த திருத்தச் சட்டத்தின் பிரகாரம் தகுதிகாண் காலப்பகுதி இறுதியில் உத்தியோகத்தர்களை நிரந்தரமாக்குவதற்காக பரீட்சை ஒன்று நடத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக உள்ளக கணக்காய்வுப் பிரிவின் சேவையில் இருந்த இரண்டு கணக்காய்வு உதவியாளர் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சை ஒன்று நடத்தப்படாமல் 1996 இன் 26 ஆம் இலக்க புத்தசிராவக்க பிக்கு பல்கலைக்கழக சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் ஆளுகை சபை அங்கீகாரத்தின் பேரில் நிரந்தரமாகப்பட்டிருந்தனர் | 1996 இன் 26 ஆம் இலக்க புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழக சட்டத்தின் 25 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் III ஆம் அத்தியாயத்தின் 21.1.4 பிரிவின் பிரகாரம் ஆளுகை சபை அங்கீகாரத்தின் பேரில் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது | 2012 இன் 15 ஆம் இலக்க புத்த சிராவக பிக்கு பல்கலைக்கழக (திருத்த) சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| | i XIX ஆம் அத்தியாயத்தின் 5.2 ஆம் பந்தி | பட்டியல்படுத்தப்பட்ட வீடுகளில் குடியிருக்கும் கல்விசார் பதவியணியினரின் 9 பேரிடமிருந்து வீட்டு கூலி அறவிடப்படாமல் மற்றும் கல்விசாரா பதவியணியின் ஏனைய வீடுகளைப் பெற்றுக் கொண்ட இரண்டு பேரிடமிருந்து மாதாந்தம் ரூபா 500 மற்றும் ரூபா 2000 வீதம் தாபனவிதிக் | விடுதி வழிகாட்டி மற்றும் கட்டணங்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை 2023.03.10 ஆம் திகதி நடைபெற்ற 272 ஆவது நிர்வாக சபையால் அங்கீகரிக்கப் பட்டுள்ளதுடன் அதன் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 2023 ஏப்ரல் முதல் | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக வீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது. | கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | |
| ii | XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பந்தி | பல்கலைக்கழகத்தில் வீடு வசதிகளை வழங்கப்பட்டிருந்த விடுதிகள் மற்றும் 6 உத்தியோகபூர்வ வீடுகளுக்காக மின்சாரம் ரூபா 6,187,804 தொகையும் விடுதிகள் மற்றும் 05 உத்தியோக பூர்வ வீடுகளுக்காக ரூபா 1,583,661 தொகையும் மீளாய்வாண்டில் பல்கலைக்கழக நிதியத்தில் இருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அத்தோடு இந்த உத்தியோகபூர்வ வீடுளுக்கு ஒதுக்கப்பட்ட மின்சாரம் மற்றும் நீர் மானி இதுவரை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு எடுக்கவில்லை | பிரதான வளவுக்காக பொது நீர் மற்றும் மின்சாரம் தொடர்பாக பெற்று மின்சாரம் இணைப்புக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் பூங்கா பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் பல்கலைக்கழகத்தின் ஏனைய நடவடிக்கை களுக்காக நீர் மற்றும் மின்சார வளங்கள் மூலம் பயன்படுத்தப்படுவதால் விடுதி வசதிகளை வழங்கும் போது விடுதிகளின் கீழ் காணப்படும் நீர் மற்றும் மின்சார செலவை நாம் திட்ட வட்டமாக மேற்கொள்ள முடியாததாகவும் இக்கணக்காய்வு விசாரணையில் பதவியணி வதிவிட குழுவிற்கு (S.R.C) அனுப்பி வைக்கப்பட்டு தீர்மானம் என்று எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 19,423,278 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடெத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 47,292,364 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 27,869,086 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் இவ்வதிகரிப்பிற்கு மீண்டெழும் நிதி ஏற்பாடு ரூபா 53,800,000, முதலீட்டு வட்டி ரூபா  மற்றும் நானாவித வருமானம் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 விகித பகுப்பாய்வு

முன்னைய ஆண்டின் நடைமுறை சொத்து விகிதம் 1:1:36 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அது 1:137 ஆக இருந்தது. விரைவு விகிதம்  1:1.32 இலிருந்து 1:1.29 வரை அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் கல்வி சாரா பதவியணியின் பொது ஊழியர் தொழிற்சங்க பொதுச்சபை கூட்டத்தை அனுராபுரம் மாவட்டத்திற்கு வெளியே பிரதேசம் ஒன்றில் நடத்துவதற்கு முகமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பேரில் 2019 மற்றும் 2020 | 2022 செப்தம்பர் 23 ஆந் திகதி நடைபெற்ற தொழிற்சங்க பொதுச்சபை சம்மேளன கூட்டம் 2019 நவம்பர் 22 ஆந் திகதி நடைபெற்ற தொழிற்சங்க பொதுச்சபை சம்மேளன | கணக்காய்வு அவதானிப்பு மீளாய்வு செய்யப்பட்டு தீர்வு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கூட்டங்களுக்கு உத்தியோகத்தர்களை போக்குவரத்து செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 788,000 ஆன பேருந்துக் கட்டணங்களுக்காக பல்கலைக்கழக நிதியிலிருந்து செலவிடப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரியதாக இருந்தது. அவ்வாறே 2019 ஆம் ஆண்டின் கூட்டம் சீகிரிய பிரதேசத்திலும் 2022 ஆம் ஆண்டிற்கான கூட்டம் திருகோணமலை பிரதேசத்திலும் நடத்தப்பட்டு, கதிர்காம பிரதேசத்தில் நடத்தப்பட்டதாக போக்குவரத்து கட்டணங்கள் கொடுப்பனவு செய்யப்பட்டமையால் ரூபா 642,711 கூட்டுத்தொகையான கூடிய போக்குவரத்து கட்டணமொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கூட்டம் கதிர்காமத்திலும் நடத்தப்பட்ட தாக தொழிற்சங்கத்தினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதாக. இது தொடர்பாக ஆரம்ப பரிசோதனை ஒன்றை மேற்கொள்வதற்கு ஆளுகை சபைக்கு அனுப்பி தீர்மானம் ஒன்று எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1996 இன் 26 ஆம் இலக்க புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழக சட்டத்தின் 3(i) மற்றும் 3(v) ஆம் பிரிவுகளின் பிரகாரம் புத்த பகவானின் போதனைகளுக்கு இணங்க பிக்கு மாணவர்களுக்கு பயிற்சியளிக்கும் நோக்கத்திற்கு இணங்க நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் மேற்படி நோக்கங்களுக்கு முரணாக முதுகலை பட்டம், வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் கற்கைநெறி பிரிவு மூலம் ஜோதிடத்தில் உயர் சான்றிதழ் கற்கை நெறியை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 1996 இன் 26 ஆம் இலக்க புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழக சட்டத்தின் 3(v) ஆம் பிரிவின் பிரகாரம் ஜோதிடம் இலங்கை பௌத்த கலாசாரத்தில் உள்ளடங்கிய ஒன்று என்பதால், மூதவை மற்றும் பேரவையின் அங்கீகாரத்துடன் ஜோதிடத்தில் உயர் சான்றிதழ் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக | சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் அதற்குரிய பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 சனவரி 14 இல ரூபா 80,843,406 கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த 25 வெளிநாட்டு மாணவர்களுக்கான விடுதி நிர்மாணிக்கப்பட்டு கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 15 வரை 03 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் ஒரு மாணவன் மாத்திரம் விடுதியில் தங்கவைக்கப்பட்டுள்ளதால் அக் கட்டிடம் மற்றும் ரூபா 3,411,000 கிரயமான மின்சாரம் மற்றும் பொருத்துதல்கள் நீண்டகாலமாக விளைவற்று காணப்படுகின்றன. | ஒருவெளிநாட்டு பிக்கு மாணவர் மாத்திரம் உள்ளக பாடநெறியை பயில பதிவு செய்யப்பட்டுள்ளதாக | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

.

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வள முகாமைத்துவம் தொடர்பான தகவல்கள் முறைமை (Enterprise Resource Planning) நிறுவம் ரூபா 08 மில்லியனான ஒப்பந்தம் 2017 ஜுன் 1 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 மே 31 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 4 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் முறைமையை பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது. | இணையத்தள இணைப்பை பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டதன் பின்னர் ERP மொடியுலில் காணப்படுகின்ற தவறுகளை திருத்தி பல்கலைக் கழகத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த வழங்குனருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக | உடன்படிக்கை பிரகாரம் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் சொத்துக்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 384,409,981 ஒப்பந்த பெறுமதியான இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் பல்நோக்கு கட்டிட நிர்மாணம் 2020 மே 22 ஆந் தேதி ஆரம்பிக்கப்பட்டு 2022 மே 01 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதும் 2023 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் திகதி நீடிக்கப்பட்டு வந்ததுடன் நிதிப் பற்றாக்குறை காரணமாக இடைநடுவில் நிறுத்தப்பட்டு இருந்தது. 2023 ஜனவரி 13 ஆந் திகதி கணக்காய்வினால் மேற் கொள்ளப்பட்ட இடப் பரிசோதனை போது நிறைவேற்றப்படாத வேலை களுக்காக ரூபா 5,000,578 மற்றும் பட்டியலுக்காக மிகைக் கொடுப்பனவு காரணமாக ரூபா 6,603,970 தொகை ஒப்பந்தக்காரருக்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த ஒப்பந்தக்காரரால் 2023.04.25 ஆந் திகதி செயற்திட்டத்தின் வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் உங்களது அவதானிப்பின் பிரகாரம் கவனத்தை செலுத்தி குறித்த கொடுப்பனவு செயற்பாடுகளுக்காக பரிந்துரைகள் பெற்றுக் கொள்வதாக. | கணக்காய்வு அவதானிப்பினை மீளாய்வு செய்து தீர்வு செய்வதற்காக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |